## *புனித சிங்ளெத்திக்கா*

இவள் எகிப்து நாட்டிலுள்ள அலெக்சாந்திரியா நகரில் பிறந்தாள். இவளுடைய பெற்றோர் மசதோனியா நாட்டிலிருந்து வந்த செல்வந்தர்கள்; இவளிடம் பணமிருந்தது; அழகுமிருந்தது. எனவே அநேகர் இவளை மணமுடிக்க விரும்பினர். இவளோ இளம் வயதிலேயே தன் கன்னிமையை பரலோக பர்த்தாவுக்கு அர்ப்பணித்து விட்டாள். பெற்றோர் இறந்ததும் தன் திரண்ட செல்வத்தை ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடுத்து விட்டு காட்டுக்குச் சென்று தனிமையில் கடவுளுக்காகவே வாழ்ந்து வந்தாள். ஒரு குருவை அழைத்து வந்து அவரது முன்னிலையில் தன் தலை ரோமத்தை வெட்டினாள். உலகத்தைத் துறந்து, கடவுளுக்குத் தன்னை அர்ப்பணிப்பது இவளது குறிக்கோளாக இருந்தது. இவள் மறைந்த வாழ்வு நடத்தி தவமுயற்சிகள் செய்தாள். இவள் புனிதை என்னும் செய்தி எங்கும் பரவவே, அநேக பெண்கள் இவளிடம் வந்தார்கள். இவளால் ஏற்பட்ட நலனைக் கண்டு பொறாமை கொண்ட சாத்தான் கடவுளின் அனுமதியுடன் இவளுக்கு ஓயாத தொல்லை கொடுத்து வந்தான். கொடிய நோய்கள் இவளுக்கு வந்தது. இவளோ பாடுபட்ட இயேசுவுடன் தன் வேதனைகளை ஒன்றித்து மகிழ்ச்சியுடன் அனைத்தையும் கடவுளுக்கு ஒப்புக் கொடுத்தாள். இன்னும் அதிக வேதனை வேண்டுமென்று கேட்டு மன்றாடினாள். கொடிய புற்றுநோய் இவளுக்கு வந்தது. பொறுமையுடனும், பணிந்த மனதுடனும் அனைத்தையும் சகித்து உயிர் நீத்தாள்.

**சிந்தனை:**

இயேசு பட்ட பாடுகளுடன் நமது வேதனைகளை ஒன்றித்து பிதாவுக்கு ஒப்புக் கொடுப்போம்.

**செபம்:**

நித்திய பிதாவே, உம் திருக்குமாரன் பட்ட பாடுகளைப் பார்த்து, துன்பப்படுகிறவர்களுக்கு பொறுமையைத் தாரும்.